# தொழிலாளர்கள் தொடர்பு பற்றிய தகவல்கள் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

NSW GOVERNMENT | Long Service Corporation

Tamil

## பின்னணித் தகவல்கள்

### என் தொடர்பு பற்றிய விவரங்களை நான் ஏன் புதுப்பிக்க வேண்டும்?

உங்கள் தொடர்பு பற்றிய விவரங்களைப் புதிப்பிப்பது, வரவிருக்கும் மாதங்களில் எங்களது அமைப்பு முறைகளை மேம்படுத்தும் சமயத்தில் உங்களுக்கு எளிதாக இருக்கும். உங்களது தற்போதைய தொடர்பு விவரங்கள் எங்களிடம் இருப்பதால், உங்கள் அறிக்கைகளை நாங்கள் உங்களுக்கு அனுப்ப இயலும், அத்துடன் உங்கள் பணிக்கால உரிமம்களை (service entitlements) புதுப்பித்த நிலையில் வைத்திருப்பதையும், உரிமைக் கோரல்களைத் (claims) தாக்கல் செய்வதையும் உங்களுக்கு எளிதாக்கும்.

### என்ன மாற்றங்கள் வருகின்றன?

உங்கள் நீண்ட கால சேவையை, ஒரு மென்மையான மற்றும் துரிதமான முறையில் கோருவதற்கு, எங்கள் இணைய அமைப்பு முறைகளை நாங்கள் மேம்படுத்திக் கொண்டு இருக்கிறோம். உங்கள் அறிக்கைகளைப் பார்ப்பதற்கு, மேலதிக சுய சேவைத் தெரிவுகள் (self-service options) மற்றும் தனி நபருக்காக வடிவமைக்கப்பட்ட வரைகலைச் சுருக்கம் (personalised dashboard) போன்றவை இருக்கும்.

### மேலும் விவரங்களை நான் எப்படிக் கண்டறிவது?

வெளியீட்டுத் தேதி நெருங்கும்போது மேலும் தகவல்கள் வழங்கப்படும். கூடுதல் தகவல்களுக்கு எங்கள் இணையதளத்தைக் கண்காணித்துக் கொண்டிருங்கள்.

## பதிவு செய்து கொண்டு, உள்நுழைந்து (login), தொடர்பு விவரங்களைப் புதிப்பிக்கவும்

### எந்த விவரங்களை நான் புதிப்பிக்க வேண்டும்?

தயவுசெய்து, உங்கள் மின்னஞ்சல் முகவரி, தொடர்பு கொள்ளக்கூடிய எண் மற்றும் அஞ்சல் முகவரியைப் புதுப்பிக்கவும். உங்கள் நிறுவனமோ அல்லது குடும்ப அங்கத்தினரோ பயன்படுத்தாத, உங்களுடைய தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரியைச் சேர்க்கவும்.

### எனக்கென்று ஒரு தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரி ஏன் தேவைப்படுகிறது? எனது நிறுவனத்தின் அல்லது குடும்ப அங்கத்தினரின் மின்னஞ்சல் முகவரியை நான் ஏன் பயன்படுத்த முடியாது?

நாங்கள் புதிய அமைப்பு முறைக்கு மாறும்போது, உங்கள் தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரி உங்கள் பயனர் அடையாளமாக (user ID) இருக்கும். உங்கள் பணிக்கால உரிமங்களை (service entitlements) புதுப்பித்த நிலையில் இருப்பதற்கும், உரிமைக் கோரல்களைத் (claim) தாக்கல் செய்வதற்குமான வேலைகளை உங்களுக்கு எளிதாக்கும். நாங்கள் உங்கள் அறிக்கைகளை உங்களுக்கு அனுப்பவும், உங்களுக்கு புதுப்பிக்கப்பட்ட தகவல்களைத் தெரிவிக்கவும் முடியும்.

### எனக்கு ஒரு மின்னஞ்சல் முகவரி இல்லையென்றால் என்ன ஆகும்?

புதிய அமைப்பு முறையில் உள்நுழைய, உங்களுக்கு ஒரு மின்னஞ்சல் முகவரி தேவைப்படும். உங்களுக்காக ஒரு மின்னஞ்சல் முகவரியை உருவாக்கிக்கொள்ளுமாறு உங்களுக்கு நாங்கள் பரிந்துரைக்கிறோம்.

100821CCI

TIS TRANSLATING AND INTERPRETING SERVICE

**மொழிபெயர்த்துரைப்பாளர் சேவைகள்**

உங்களுக்கு ஒரு மொழிபெயர்த்துரைப்பாளர் தேவைப்பட்டால், **தேசிய TIS (TIS National)** -ஐ **13 14 50** என்ற எண்ணுக்கு அழைத்து, **நீண்ட காலச் சேவை நிறுவனத்தை (Long Service Corporation) 13 14 41** என்ற எண்ணுக்கு அழைக்கச் சொல்லவும் அல்லது கூடுதல் தகவல்களுக்கு பின்வரும் இணையதளத்துக்குச் செல்லவும்: www.tisnational.gov.au

Interpreter

# தொழிலாளர்கள் தொடர்பு பற்றிய தகவல்கள் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

### நான் எனது விவரங்களைப் புதிப்பிக்காவிட்டால் என்ன ஆகும்?

உங்களது தற்போதைய தொடர்பு விவரங்கள் எங்களிடம் இல்லையென்றால், உங்கள் ஆண்டு அறிக்கைகளை எங்களால் அனுப்ப முடியாது, அத்துடன், மின்னஞ்சல் முகவரி இல்லாமல் நீங்கள் புதிய அமைப்பு முறையில் உள்நுழையவும் முடியாது.

### எனது தொடர்பு விவரங்களை நான் எவ்வாறு புதிப்பிப்பது?

பின்வரும் படிநிலைகளைப் பின்பற்றுவதன் மூலம் உங்கள் தொடர்பு விவரங்களைப் புதிப்பிக்கவும்:

- www.longservice.nsw.gov.au/online-portal என்ற இணையதளத்தில் உள்ள எங்களது ‘**இணையச் சேவைகள்**’ **(Online Services)** பகுதிக்குச் செல்லவும்
- ஒப்பந்தச் சுத்திகரிப்புத் தொழிலகம் என்ற தலைப்பின் கீழ் உள்ள ‘**தொழிலாளர் உள்நுழைவு**’ **(Worker Login)** என்ற இணைப்பைத் தேர்ந்தெடுக்கவும்
- உங்கள் மின்னஞ்சல் அல்லது ஊழியர் அடையாளம் (employee ID) மற்றும் கடவுச் சொல்லைப் (password) பயன்படுத்தி உள்நுழையவும்
- ‘**விவரங்களைப் புதிப்பிக்க**’ **(Update Details)** பகுதிக்குச் செல்லவும்
- கைப்பேசி எண், மின்னஞ்சல் முகவரி மற்றும் அஞ்சல் முகவரி உள்ளிட்ட உங்கள் தொடர்பு விவரங்களை மறுஆய்வு செய்யவும்/புதுப்பிக்கவும், பின்னர் ‘**சேமி**’ **(Save)** என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

### இணையத்தில் நுழைவதற்கு (online access) நான் எவ்வாறு பதிவு செய்வது?

நீங்கள் இணையத்தில் நுழைவதற்குப் பதிவு செய்யவில்லை என்றால் தயவுசெய்து பின்வரும் படிநிலைகளைப் பின்பற்றவும்:

- www.longservice.nsw.gov.au/online-portal என்ற இணையதளத்தில் உள்ள எங்களது ‘**இணையச் சேவைகள்**’ **(Online Services)** பகுதிக்குச் செல்லவும்
- ஒப்பந்தச் சுத்திகரிப்புத் தொழிலகம் என்ற தலைப்பின் கீழ் உள்ள ‘**தொழிலாளர் உள்நுழைவு**’ **(Worker Login)** என்ற இணைப்பைத் தேர்ந்தெடுக்கவும்
- பதிவு செய்வதற்கு ‘**இணையத்தில் நுழைவதற்குப் பதிவு செய்க**’ **(Register for Online Access)** என்பதற்குக் கீழ் உள்ள ‘**இங்கே சொடுக்கவும்**’ **(Click here)** என்பதைத் தேர்ந்தெடுக்கவும்
- உங்கள் பதிவு எண், பெயர், பிறந்த தேதி போன்றவற்றை உள்ளீடு செய்து, ‘**அடுத்து**’ **(Next)** என்பதைத் தேர்ந்தெடுக்கவும்
- உங்கள் மின்னஞ்சல் முகவரி மற்றும் கடவுச்சொல்லை உள்ளீடு செய்து உங்கள் பதிவை நிறைவு செய்யவும்.

### இணையத்தில் நுழையவதற்கு (online access) நான் என்ன பதிவு செய்யவேண்டும்?

உங்கள் CCI தொழிலாளர் பதிவு எண் உங்களுக்குத் தேவைப்படும். நீங்கள் எங்களிடமிருந்து பெற்ற தொழிலாளர் தொகுப்பில் இதைக் காணலாம். இதற்கு மாற்றாக, உங்கள் தொழிலாளர் பதிவு எண்ணை, உங்கள் முதலாளியிடமிருந்தோ அல்லது எங்களைத் தொடர்பு கொள்ளவதன் மூலமாகவோ பெறலாம்.

## எங்களைத் தொடர்பு கொள்ள

### கேள்விகள் ஏதாவது எனக்கு இருந்தால், நான் யாரைத் தொடர்பு கொள்ள வேண்டும்?

கேள்விகள் ஏதாவது உங்களுக்கு இருந்தால், தயவுசெய்து எங்களை 13 14 41 என்ற எண்ணிலோ அல்லது பின்வரும் இணைய முகவரியிலோ தொடர்பு கொள்ளலாம்: info@longservice.nsw.gov.au